பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 135

வியாழக்கிழமை
10 ஏப்ரல் 2025

பங்குனி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**பரஸ்பர வரிகளை கைவிட்டார் ட்ரம்ப்!**

04

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாவிடின்

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிவிலக்கு இலங்கைக்கு மறுக்கப்படும்

ஐரோப்பிய ஒன்றியம் திட்டவட்டம்



**கொழும்பு, ஏப்ரல். 10**

**ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைகள் இலங்கைக்குத் தொடர்ந்தும் வழங்கப்படவேண்டும் என்றால், பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார் மென் மொரினோ தெரிவித்துள்ளார்.**

11

ட்ரம்பின் வர்த்தகப் போர்

## சர்வகட்சிக் கூட்டத்துக்காக ஜனாதிபதி அநுர அழைப்பு

கொழும்பு, ஏப். 10
உலக நாடுகள்மீது அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வர்த்தகப்போர் தொடுத்துள்ள நிலையில், அதனால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அதிலிருந்து மீள்வதற்குரிய வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இன்று அனைத்துக் கட்சிக் கூட்டம்

11

## அமெரிக்க வரிகளால் பொருளாதாரப் பேரழிவு

ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஏப். 10
அமெரிக்கா விதித்துள்ள வரிகள் காரணமாக, நாட்டின் பொருளாதாரத்தில் பேரழிவு ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

11

## சோலர் இணைப்புக் கட்டணங்களை வாடிக்கையாளரிடம் அறவிடக்கூடாது

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு உத்தரவு

» 12

## காணாமலாக்கப்பட்டோருக்கு நிச்சயம் நீதி வழங்குவோம்!

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 10
காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நீதியை வழங்கும் என்று பிரதமர் ஹரிணி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

11

சட்டவிரோத கடற்றொழிலால்

## 56,000 மீனவக் குடும்பங்கள் வடக்கில் பெரும் பாதிப்பில்!

கொழும்பு, ஏப். 10
இலங்கையின் வடமாகாணக் கடற்பரப்பில் அதிகரித்துவரும் சட்டவிரோத கடற்றொழில்கள் காரணமாகவும், அத்துமீறிய மீன்பிடி காரணமாகவும் 56 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்

11

## தமிழர்களின் பகுதியில் சீனாவுக்கு இடமில்லை!

செல்வம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 10
இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சரியானவையே. தமிழர் தாயகத்தில் சீனாவின் நடவடிக்கைகளை அனுமதிக்கப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல

11

## பாலியல் குற்றச்சாட்டு; வேட்பாளர் கைதானார்

» 05

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## மேலும் ஆறு சபைகளுக்கு இன்று வாக்காளர் அட்டை!

யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ்ப்பாணம் மாவட்டத்தில், மேலும் ஆறு சபைகளுக்கான தபால் மூல வாக்காளர் அட்டைகள் இன்று விநியோகிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தெரிவித்தார்.
நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக, யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பருத்தித்துறை நகரசபை மற்றும் வேலணைப் பிரதேசசபை ஆகிய இரு உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே தபால்

11




'அந்தப் பக்கம் ட்ரம்பின்ர வரி, இந்தப் பக்கம் ஐரோப்பிய ஒன்றிய வெருட்டல் எண்டு இலங்கை முழுசுது கண்டியளோ'



கோப்புப்படம்

## 'வெள்ளியில் ஞாயிறு' திருப்பாடுகள் இன்று!

யாழ்ப்பாணம், ஏப். 10
திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து, வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் மேடையேற்றப்படும் 'வெள்ளியில் ஞாயிறு' தவக்காலத் தியான ஆற்றுகை இன்று மீண்டும் மேடை

11

## அளவுக்கதிக மாத்திரைகள்; பெண் இறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில், தூக்கத்துக்காக அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
வைரவநாதன் கிருஷ்ணகுமாரி (வயது-50) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

11

## நாவற்குழியில் பாலியல் விடுதி

மூன்று பெண்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 10
யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் இயங்கி வந்த பாலியல் விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டு மூன்று பெண்கள் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத்தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே,

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4043
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 08 22 64 70
விசேட எழுத்து V

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1110
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 19 27 28 42

**NLB ஜய**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0069
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 4 1 1 3

**மெகா பவர்**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2149
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 37 42 49 50

**மஹஜன சம்பத**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5801
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 1 6 3 1 5 5

**தன நிதானய**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1831
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 06 19 50 69
விசேட எழுத்து R

**அத சம்பத**
திகதி 09.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0376
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 3 1 5 5

# மோசடியாளர்களைத் தண்டிக்க புதிய சட்டம் வழியேற்படுத்தும்

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.10

**கடந்த காலங்களில் அரச சொத்துக்களை மோசடி செய்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தத் தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதற்கு தேவையான சட்டமாகவே குற்றச்செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டத் திருத்தம் அமைகிறது. இந்தச் சட்டத்தை நாங்கள் ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யமாட்டோம் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் குற்றச்செயல்கள் மூலம் ஈட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்றுவதற்கும், மக்களின் அபிலாசைகளைநிறைவேற்றுவதற்குமான ஒரு சட்டமாகவே இந்தச் சட்டம் அமைகிறது. எமது நாட்டில் மோசடிகளுக்கு எதிரான அதிக மான சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அரசியல்வாதிகளால் அவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன. பிணைமுறிமோசடி, சீனிவரி மோசடி, சீனாவில் இருந்து கழிவு உரம் கொண்டு வந்தமையால் ஏற்பட்ட நட்டம், கரவைப் பசுக்களை அவுஸ்திரேலியாவில் இருந்து கொண்டுவந்தபோது நடந்த மோசடி எனப் பலவற்றைச் சட்டத்தின் முன்கொண்டு வர இந்தச் சட்டம் மூலம் வாய்ப்பை ஏற்படுத்தும். குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

**சுபிரி தன சம்பத**
வெற்றி வாரம் 0509
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 9 0 7 0 2 4

**Super Ball**
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2775
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கம் 05 29 30 73

**சனிதா**
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கம் 02 56 71 76
வெற்றி வாரம் 4936

**லக்ன ராசி**
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம் 05 30 48 49
சீட்டிழுப்பு வாரம் 4487

**KAPRUKA**
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து N
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கம் 06 15 53 74
வெற்றி வாரம் 1951

**அத கோடிபதி**
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 27 28 38 52
வெற்றி வாரம் 2601

**JAYODA**
திகதி 09.04.2025 தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 08 39 41 66
வெற்றி வாரம் 2119

## உள்ளூராட்சித் தேர்தல் 13 வேட்பாளர்கள் கைது

கொழும்பு, ஏப். 10

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 13 வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 11 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## குறைந்தபட்ச வேதனம் சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, ஏப்.10

தொழிலாளர்களுக்கான தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு இணையாக தனியார் துறையின் ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

அதற்கமைய தேசிய குறைந்தபட்ச மாதாந்தச் சம்பளம் மற்றும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தைத் திருத்தம் செய்வதற்கும், அதற்குரிய ஏனைய சட்ட ரீதியான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்கும் தொழில் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)



# அமெரிக்காவின் வரிச்சிக்கலை அரசியலாக்கும் எதிர்க்கட்சிகள்

## நளிந்த ஜயதிஸ்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.10

இலங்கைக்கு மட்டும் அமெரிக்கா வரி விதிக்கவில்லை. ஆனால் அரசியற் கட்சிகள் இந்தப் பிரச்சினையை அவ்வாறே காண்பிக்க முயல்கின்றன. இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள வரி அதிகரிப்பானது உலகின் பல நாடுகளிலும் பெரும் பிரச்சினையாக மாறியிருக்கின்றது. ஆனால் எமது நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதுள்ள கோபத்தால் ட்ரம்ப் வரி விதித்தார் என்று காண்பிக்க முயல்கின்றன. இந்தப் பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-இ)

# தமிழரசுக் கட்சியின் எம்.பி.யை விமர்சிக்கும் பிமல் ரத்நாயக்க!

கொழும்பு, ஏப்.10

வடக்கையும், தெற்கையும் நாசமாக்கிய ராஜபக்சக்கள் மற்றும் பிள்ளையானுடன் வாக்குக் கேட்டவர்தான் சாணக்கியன். தமிழ் அரசியலுக்கே அவரால் இழுக்கு. ராஜபக்சக்களின் அவதாரம் அவர். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மீது விமர்சனக் கணைகளைத் தொடுத்துள்ளார் சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க. அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அந்த நாடாளுமன்ற உறுப்பினர் (சாணக்கியன்) தொடர்பில் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தேன். ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் பிரதிநிதியாக மட்டுப்படுத்தப்பட்ட நிதியைப் பெற்றார் என்பது அதில் ஒரு குற்றச்சாட்டாகும். 2006, 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் நாம் ராஜபக்சக்களுடன் இருக்கவில்லை. 2005 இல் நாம் ராஜபக்ச ஆட்சியில் இருந்தாலும், அவர்கள் செய்த அட்டூழியங்களால், மோசமான அந்த ஆட்சியில் இருந்து வெளியேறினோம். வடக்கையும், தெற்கையும் நாசமாக்கிய நபருடன் இணைந்து செயற்பட்டவர்தான் இவர். (சாணக்கியன்) 2012, 2013 களில் ராஜபக்சக்களுடன் ஓட்டு கேட்டுள்ளார். பிள்ளையானின் மேடையிலும் இருந்துள்ளார். ராஜபக்ச அவதாரம் அவர். ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் சபாபீடத்தை அவமரியாதைக்கு உட்படுத்தவில்லை என்பதையே நான் சுட்டிக்காட்டி இருந்தேன் - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருவியாறு சுற்றுலா வலயம் குஞ்சுக்குளத்தில் திறந்துவைப்பு

**மன்னார், ஏப். 10**

**மடுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குஞ்சுக்குளம் கிராமத்தில் அருவி ஆற்றுப் பகுதியில் அமைக்கப்பட்ட 'அருவி ஆறு சுற்றுலா வலயம்' நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.**

இதன்போது அருவி ஆறு சுற்றுலா வலயப் பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தொங்கு பாலமும் திறந்துவைக்கப்பட்டது. சுற்றுலாப்பயணிகளைக் கவரும்வகையில் இந்த சுற்றுலா வலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் வடக்கு மாகாண சுற்றுலாத் துறைத் தலைவர் பத்திநாதன், வடக்கு மாகாண சுற்றுலாத்துறைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நானாட்டான் பிரதேசசபை செயலாளர் மற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். (ச-இ)

## மாவைக்கந்தனுக்கு நாளை கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 10

வரலாற்றுச்சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் 50 ஆண்டுகளின் பின்னர் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.07 மணி முதல் 10.09 மணிவரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பமாகிய எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது. (ச-17)

## பிள்ளையான் கைதை கொண்டாடிய மக்கள்!

மட்டக்களப்பு, ஏப். 10

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கைதுசெய்யப்பட்டமைக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பில் பட்டாசு கொழுத்தி கொண்டாடப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இளைஞர்களினால் நேற்றுமுன்தினம் மாலை பட்டாசு கொழுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## ஊழல் தடுப்பு அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, ஏப்.10

தேசிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைய மாவட்டச் செயலகங்களில் உள்விவகாரப் பிரிவுகளை ஆரம்பிக்கும் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஊழல் எதிர்ப்பு அலுவலகம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

மாவட்ட மேலதிக செயலர் நளாயினி இன்பராஜ் தலைமையில் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் தேசிய நிகழ்வை உத்தியோகத்தர்கள் நேரலையாக பார்வையிட்டனர். (ச-25,113)

## இ.போ.ச. விலிருந்து 1000 பேர் நீக்கம்!

கொழும்பு, ஏப். 10

இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றிய ஆயிரம் சாரதிகளும் நடத்துநர்களும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் தவறான நடத்தைகள் காரணமாகவும் கடந்தகாலங்களில் அரசியல் செல்வாக்கில் நியமிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் நீக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ச-41-6)

## பாடசாலை விடுமுறை

கொழும்பு, ஏப். 10

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் முதலாம் தவணையின் 2ஆம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நாளை வெள்ளிக்கிழமையுடன் முடிவடையவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, முதலாம் தவணைக்கான மூன்றாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் 21 ஆம் திகதி ஆரம்பமாகி மே 9 ஆம் திகதி வரை நடைபெறும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)




**காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை கேள்விப்பட்டிருப்பியள், பாறாங்கல் விழுந்ததைப் பற்றி உங்களுக்குத் தெரிஞ்சிருக்காது. அப்பிடி ஒரு பாறாங்கல்லுத்தான் வவுனியா மாவட்டத்தின்ர முன்னாள் எம்.பி. ஒருத்தருக்கு விழுந்திருக்குது. இது கொஞ்சம் பழசாப்போன விசயம்தான். எண்டாலும் அறிஞ்சு வைச்சிருக்கிறது நல்லதுதானே.**

**சும்மா தன்ரபாட்டில வீணைவாசிச்சுக் கொண்டிருந்தவருக்கு போனமுறை எம்.பி. பதவி கிடைச்சதே ஒரு குருட்டு லக்கிலதான். ஆனால் ஒரு எம்.பி. பதவியை வைச்சு என்னவெல்லாம் செய்ய ஏலுமோ அவ்வளவும் ஆள் செய்துபோட்டுது. எலக்சனில நிக்கேக்க கடன்காரரா இருந்த அவர், அதுக்குப் பிறகு வெள்ளி துலாவில ஏற, பதவிக் காலம் முடியேக்க டிப்பர், ஹயஸ் எண்டு பெரும் வசதியா வந்திட்டார். எம்.பி. சம்பளத்தில இதுகளையெல்லாம் வாங்க ஏலாது எண்டு சின்னப்பிள்ளைக்கும் தெரியும்தானே. இப்பிடியெல்லாம் கொஞ்சக் காலத்திலேயே வசதி, வாய்ப்போட வளமான அந்த முன்னாள் எம்.பி. இப்ப இந்தியாவில களி திண்டு கொண்டிருக்கிறாராம். அந்தக் கதையைக் கேட்டா ஆளில ஒரு பரிதாபம் வரத்தான் செய்யும்.**

**அந்த முன்னாள் எம்.பி, எலக்சன் கேக்கமுதல் கடும் கஷ்டத்தில இருந்தவர். என்ன செய்தாவது வெளிநாடு போகவேணும் எண்டு கையில இருந்த காசெல்லாம் ஏஜென்ஸிக்காரரிட்ட கனதரம் குடுத்து ஏமாந்துபோனார். அப்பிடி வெளிநாடு போகவெண்டு ஒருக்கா அவர் இந்தியாவுக்குப் போனவர். அங்க இந்தியப் பாஸ்போர்ட் களவா எடுத்து, அதில வெளிநாடு போற மாதிரித்தான் பிளான். ஆனால் அது கடைசி நேரத்தில பிழைச்சுப் போட்டுதெண்டு, அவர் அந்த முயற்சியைக் கைவிட்டிட்டு இலங்கைக்கு வந்து எலக்சன் கேட்டு வெண்டு, பிறகு கைநிறைய உழைச்ச கதை உங்களுக்குத் தெரியும். இந்தமுறை எலக்சனில தோத்ததால, இஞ்ச நிண்டால் ஏதும் ஊழல் வழக்குகளைப் போட்டிடுவாங்களோ எண்ட பயத்தில கொஞ்சநாளைக்கு இந்தியாவில போய் நிப்பமெண்டு அந்த முன்னாள் எம்.பி. வெளிக்கிட்டவர். ஆனால் காகம் இருக்கப் பாறாங்கல்லு விழுந்து போட்டுது. இவர் இந்தியா போனநேரமெண்டு பார்த்து, இவருக்கு முந்தி கள்ளப்பாஸ்போர்ட் செய்துகுடுத்தவர் பொலிஸில பிடிபட்டுப்போனார். அவரிட்ட இருந்த கள்ளப்பாஸ்போர்ட்டில இந்த முன்னாள் எம்.பி,யின்ர பாஸ்போர்ட்டும் இருந்திருக்கு. அந்தநேரம் எண்டு பார்த்து இந்த முன்னாள் எம்.பி.யும் அங்க நிண்டதால அப்பிடியே ஆளை தமிழகப் பொலிஸ் அப்பிக்கொண்டு போய் ஜெயிலுக்க போட்டுட்டுது. அவர் இலங்கையில இருந்திருந்தால் இந்தச் சிக்கலொண்டும் வந்திருக்காது. எப்பவோ செய்த கள்ளப்பாஸ்போர்ட் இப்ப சிக்கினதும், அந்த நேரம் பார்த்து இந்த முன்னாள் எம்.பி. இந்தியாவில நிண்டதால அரெஸ்ட் ஆனதும், காகம் இருக்கப் பாறாங்கல்லு விழுந்ததுக்குச் சமம்தானே?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனம்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத் துணை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும்காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்லதகவல் இன்று வந்து சேரும். அலுவலகத்தில் அதிகாரிகளின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையால் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பு

# ராஜஸ்தானை வீழ்த்தி குஜராத் அபார வெற்றி

## புள்ளிப்பட்டியலில் முதலிடம்



**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ராஜஸ்தானைத் தோற்கடித்து புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது குஜராத் அணி.**

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணியின் ஆரம்ப வீரர்களாக சாய் சுதர்சன் மற்றும் கில் இருவரும் களமிறங்கினார்கள். இரண்டே ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கில்.

சாய் சுதர்சன், பட்லர் இருவரும் இணைந்து இன்னிங்ஸை நல்ல முறையில் கட்டமைத்தனர். 36 ஓட்டங்களுடன் பட்லர் ஆட்டமிழந்தார். பதிலுக்குக் களமிறங்கிய சாருக் கானும் 36 ஓட்டங்களைப் பெற்றார். சாய் சுதர்சனின் இன்னிங்ஸ் 82 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. தெவட்டியா கடைசிக் கட்ட அதிரடியைக் கையிலெடுத்து 12 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றது குஜராத்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தானுக்கு, ஆரம்ப வீரர் சாம்சன் ஒரு முனையில் நிலைத்தாலும் மறுமுனையில் ஜெய்ஷ்வால் 6 ஓட்டங்களுடனும், ரணா ஓர் ஓட்டத்துடனும், ரியான் பராக் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். சஞ்சு சாம்சன் 41 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். கடைசி நம்பிக்கையான ஹெட்மயர் 32 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இறுதியில் ராஜஸ்தான் அணியால் 159 ஓட்டங்களையே பெறமுடிந்தது. 58 ஓட்டங்களால் வென்றது குஜராத். (ம)




# தமிழ்நாடு தருமபுரம் ஆதீன மடாதிபதி யாழ்ப்பாணம் வருகை





யாழ்ப்பாணம், ஏப்.10

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா 50 ஆண்டுகளின் பின்னர் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகப் பெருவிழாவில் பங்கேற்பதற்காக இந்தியாவின் தமிழ்நாட்டின் மிகவும் தொன்மையான ஆதீனமான தருமபுரம் ஆதீனத்தின் 27ஆவது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் ஊடாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் வருகைதந்த அவர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை நேற்றுப் புதன்கிழமை சந்தித்தார். (ச-41-66,125)

## பரஸ்பர...

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தனது பரஸ்பர வரி விதிப்புக்களைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக அறிவித்துள்ளார். பதிலாக 10 வீத வரிகளே விதிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உலக நாடுகள் அமெரிக்காவுக்கு விதித்த வரிகளுக்கு இணையாக, அமெரிக்க அதிபர் ட்ரம்பும் பலஸ்பர வரிவிதிப்பை நடைமுறைப்படுத்தினார். இதனால், ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் ஆட்டம் கண்டது. இந்த வரி விதிப்பால், வளர்முக நாடுகளின் பொருளாதாரமும் பங்குச் சந்தையும் படுவீழ்ச்சியைச் சந்தித்தன.

அதிபர் ட்ரம்ப் தனது முடிவை மாற்ற வேண்டும் என்று உலக நாடுகள் பலவும் கோரிக்கைகளை முன்வைத்தன. இதன் தொடர்ச்சியாகவே, பரஸ்பர வரிவிதிப்பைக் கைவிடுவதாகவும், அதற்குப் பதிலாக 10 வீத வரி விதிப்பு நடைமுறையில் இருக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். அது தொடர்பான புதிய உத்தரவிலும் அவர் கைச்சாத்திட்டுள்ளார்.

ஆனால், சீனாவுக்கு எதிராக 125 வீத வரிகளை விதிப்பதாக அறிவித்துள்ளார். சீனா அமெரிக்காவையும், உலக நாடுகளையும் மோசமான வகையில் சுரண்டுவதால் இந்த நடவடிக்கை அவசியமானது என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். 80 நாடுகளுக்கான பரஸ்பர வரிகளே கைவிடப்பட்டுள்ளன. அதில் இலங்கை உள்ளதா? என்று உறுதிப்படுத்தப்படவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

கடினமான காரியங்களை சிறப்பாகச் செய்வதற்கு முயற்சி செய்வதன் மூலம் நீங்கள் புகழைச் சம்பாதிக்கிறீர்கள்.

–ஜெப் பெஸோஸ்–

# கதியும் அதோகதியும்!

உலகின் முதலிரு பொருளாதார சக்திகளுக்கான வர்த்தகப் போர் ஆரம்பமாகியிருக்கின்றது. பரஸ்பர வரி விதிப்புக்கொள்கையின் கீழ், சீனாவுக்கு அமெரிக்கா 34 வீத வரி விதித்ததைத் தொடர்ந்து, சீனாவும் அமெரிக்காவுக்கு 34 வீத வரிவிதித்தது. இதனால் கோபம் கொண்ட அமெரிக்கா, சீனாவுக்கான வரியை 104 வீதமாக உயர்த்தியுள்ளது. இதற்குச் சீனாவும் பதிலடி கொடுக்கத் தயாராகியுள்ளது. அனேகமாக, இன்றோ அல்லது நாளையோ அமெரிக்கா மீதான தனது வரிகளை 104 வீதமாக அல்லது அதற்கும் மேலாக சீனா உயர்த்தும். இத்துடன் இது நின்றுவிடப்போகும் கதையுமல்ல. நிச்சயமாக இதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மிகப் பயங்கரமானவையாகவும், பாரதூரமானவையாகவும்தான் இருக்கப்போகின்றன.

சீனாவும் அமெரிக்காவும் சாதாரண நாடுகளல்ல. இவை உலகின் அசாதாரண சக்திகள். ஆதலால், இந்த வர்த்தகப் போரின் பாதிப்புகள் நிச்சயம் இந்த இரண்டு நாடுகளுடன் மட்டுப்படும் விடயமல்ல. இதற்குப் பின்னரான அரசியல் மிகப்பாரதூரமானது. அதில் இலங்கையும் தொடர்புபட்டிருக்கின்றது. வரிவிதிப்புகள் எல்லைமீறும்போது, அது வர்த்தகத் தடைகளில் வந்துமுடியும். இதற்கான ஆரம்பப்புள்ளியையும் சீனா இட்டிருக்கின்றது. இதன்படி, அமெரிக்கத் திரைப்படங்களை சீனாவில் திரையிடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது. இதன் இறுதிவடிவம் என்னவென்றால், 'சீனாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளைத் தனிமைப்படுத்துவோம்' என்று அமெரிக்கா அறிவிப்பதாக அமையும். அப்படியொரு நிலை நேரின், அது இலங்கைக்கான பேரிடிதான் என்பதில் இரண்டாம் கருத்தில்லை.


சீனாவுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது தவறல்ல. சீனாவின் அனுகூலங்களையும், அதன் முதலீடுகளையும் முற்றுமுழுதாக நம்பியிருப்பதுதான் பெருந்தவறு. ஏற்கனவே,'தாய்வான் சீனாவின் ஒருபகுதி' என்றுகூறி பூகோள ரீதியிலான சர்ச்சைக்குள் வலிந்து மாட்டியிருக்கின்றது இலங்கை. இவ்வாறிருக்கையில், மேலும்மேலும் சீனாவை நோக்கி ஆழமாக நகர்வது பெரும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். அத்தகையதொரு நிலை நேரக்கூடாது என்றால், உலகின் ஏனைய நாடுகளைப் போன்று சீனாவை ஒரு 'வணிக வாய்ப்பாக' இலங்கை பயன்படுத்தவேண்டுமேதவிர, விசுவாசம் காட்டுவதற்கெல்லாம் தற்போது இடமில்லை.

இதுவரை இலங்கையை அமெரிக்கா இலக்குவைத்து எந்தக் காய்நகர்த்தலையும் செய்யவில்லை. தற்போதைய அதிபர் ட்ரம்பின் பொருளாதாரக் கொள்கையால் வந்த விளைவுக்கே இத்தனை பதற்றங்களும், ஆர்ப்பாட்டங்களுமென்றால், சீனாவை உலக வல்லரசு என்ற ஸ்தானத்தில் இருந்து அகற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் இலங்கையும் இலக்கானால், நிச்சயமாக அதன் விளைவு மிகவும் பாரதூரமாகவே அமையும். விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ இந்தியப் பிரதமர் மோடியைக் கூப்பிட்டு, குளிர்வித்துக் குஷிப்படுத்தி அனுப்பிய அநுர அரசின் முடிவு இப்போதைக்கு சாதகமானதும், காலத் தேவையுமாகும். இந்தப் பாதையில் தொடர்ந்து பயணித்தால், இலங்கைக்கு ஏதாவது வாய்ப்பு மிச்சமாகும். அதைவிடுத்து சீனாவே கதி என்றிருந்தால், அதன் விளைவு அதோகதிதான்.




# ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, ஏப். 10
நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் குறிப்பாக நகர்ப்புற தேசிய பாடசாலைகளில் க.பொ.த உயர்தரப் பாடத்துக்கான ஆசிரியர்களுக்குக் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது என இலங்கை ஆசிரியர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.
கல்வித்துறையில் சுமார் 30 ஆயிரம் ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கான எந்தவொரு உறுதியான திட்டத்தையும் செயற்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. இது பல்கலைக்கழக நுழைவுக்குத் தயாராகும் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வித்தரத்தை அச்சுறுத்தும் 'கடுமையான நெருக்கடி' என்றும் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ச-இ)



# வெப்பம் உக்கிரம்

கொழும்பு, ஏப். 10
நாட்டின் பல மாகாணங்களில் மனித உடலுக்கு அதிகம் உணரக்கூடிய வகையில் அதிக வெப்பமான வானிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதன்படி, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் வெப்பமான வானிலை நிலவும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-இ)



# பாலியல் குற்றச்சாட்டில் வேட்பாளர் கைது

கொழும்பு, ஏப். 10
அம்பாந்தோட்டை நகரசபைக்கான தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிடும் ஒருவர் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்டவர் அம்பாந்தோட்டை சிறிபோபுரப் பகுதியைச் சேர்ந்தவராவர். குறித்த பகுதியில் வசிக்கும் ஒரு பெண் அம்பாந்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சிறுவர்கள் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-சி)



# பலகாரங்கள் விலையேற்றம்

கொழும்பு, ஏப். 10
புத்தாண்டுக் காலத்தில் இனிப்புகளின் விலையை கடந்த ஆண்டைவிடவும் அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக இனிப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
தேங்காய், அரிசி மற்றும் தேன் ஆகியவற்றின் விலை அதிகரித்ததன் காரணமாக இந்த விலை உயர்வு அவசியமானது என்றும் உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச-இ)

# முட்டை, இறைச்சி விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 10
பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.
முட்டை ஒன்று 39 ரூபா முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும், கோழி இறைச்சி ஆயிரத்து 100 ரூபா முதல் ஆயிரத்து 200 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை
## பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 10.04.2025 தொடக்கம் 23.04.2025 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 24.04.2025 பிற்பகல் 3.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 24.04.2025 பிற்பகல் 3.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை. தலைமை அலுவலகம்
பளைநகர பொதுச்சந்தை 12 கடைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| மேற்தரை | | | | |
| 1. | PMS-08 | 1,440,000.00 | 21,600.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்).
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 24.04.2025 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் பல கடைகளுக்கு விண்ணப்பிக்குமிடத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு மிகபொருத்தமானது என கருதும் சித்திரகுத்தகைதாரருக்கு, ஒருவருக்கு (இங்கு ஒருவர் என்பது ஒரு குடும்பத்தைக் குறிக்கும்) ஒருகடை மாத்திரமே சபையினால் வழங்கப்படும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. நீண்டகால குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும்.
06. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உபவாடகைக்குக் கொடுக்கவோ, உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
07. குறித்த கடைகளில் சகிக்கமுடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
08. கேள்விச் சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
09. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணாங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
10. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபாரவரி, உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி.த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.
10.04.2025.
CR/0003) J-1

# வர்த்தக சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.10

வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களம், தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் புடவைக் கைத்தொழில் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள வர்த்தகசந்தை இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளைமறுதினம் சனிக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ்.முற்றவெளியில் முன்னெடுக்கப்பட வுள்ள இந்த வர்த்தக சந்தைக்கு அனுமதி இலவசம். அதேவேளை மாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை கலாசார நிகழ்வுகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25-9)

# நீச்சல் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 10

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு சுழிபுரம் மேற்கு சவுக்கடி கடற்பரப்பில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நீச்சல் போட்டி இடம்பெறவுள்ளது என்று சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக்கழகம் தெரிவித்துள் ளது .

அதனைத் தொடர்ந்து சதுப்புநில நடைபோட்டி இடம்பெறவுள்ளது. போட்டிகளைக் கண்டுகளிக்க விரும்பும் பார்வையாளர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-125)

# ஆங்கில ஆய்வு கருத்தரங்கம் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி மன்றம் நடத்தும் ஆங்கில மொழிக் கற்பித்தல் ஆய்வுக் கருத்தரங்கம் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஆங்கில மொழிக் கற்பித்தல் கணினிக் கூடத்தில் துறைத் தலைவர் கலாநிதி. கி. சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 05 . 1930



மறைவு
22 . 03 . 2024

அமரர் செல்வி கந்தையா வாலாம்பிகை

(முன்னாள் அதிபர் கௌரி அம்பாள் வித்தியாலயம் திருக்கேதீஸ்வரம்)

மயங்கிய நிலையில் மருத்துவமனை சென்று
மடிந்த நிலையில் மனை திரும்பி
நினைக்கும் பொழுதெல்லாம்
கண்ணீர் கசிய வைத்து
விண்ணுலகம் சென்று ஓராண்டு ஓடிவிட்டதே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்

புகையிரத வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்
(CS/57939) J-1
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 09 . 1928



மறைவு
09 . 04 . 2025

சரவணமுத்து துரைரத்தினம்

(சரவணா விடுதி உரிமையாளர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், அரியாலை, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து துரைரத்தினம் அவர்கள் நேற்று (09.04.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - இளையாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், ஜெயரத்தினம், சரஸ்வதி, மகேஸ்வரி, சிவமணி மற்றும் நவரத்தினம், யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், கீதாஞ்சலி (கனடா), மைதிலி (டென்மார்க்), குமுதினி (பிரான்ஸ்), சுபாஷினி (பிரான்ஸ்), சுதர்ஷினி, சுசிகலா, காலஞ்சென்ற கமலினி மற்றும் வசீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயகுலசிங்கம் (கனடா), நவீந்திரன் (டென்மார்க்), ரமேஷ் (பிரான்ஸ்), கனகராஜ் (பிரான்ஸ்), பரராஜசேகரம், பிறேமானந்தன், மைதிலி ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி (கனடா), பிரணவன், ராகவி, இலக்கியா (டென்மார்க்), ஓவியா, அபிநயா, மானுஷா (பிரான்ஸ்), மதுமிதன், அகரன், எழிலன் (பிரான்ஸ்), முகிலன், நிலவன், காருண்யன், பிரஷா, கம்ஷா, துஷா, அபிமன்யு, ஹரினி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2025) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 499 6593

[illegible] வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(CS/2925) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

## ஸ்ரீ மஹாவல்லி ஸ்ரீ கஜவல்லி சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமியின்
## அனுக்கிரகத்தினால் ஸம்புரோக்ஷண சித்விலாஸ

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

### விஞ்ஞாபன பத்திரிகை நாளை (11.04.2025) வெள்ளிக்கிழமை

**10.04.2015 பங்குனி 27 நாள் வியாழக்கிழமை :** காலை 7.00 மணி முதல் 12.30 மணி மதியம் வரை யாகபூசை 8ம் காலம் ஹோமங்கள் நிகழ்ச்சிகள் கோபூஜை திருமறை திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம் மாலை 4.00 மணி முதல் யாக பூசை 9ம் காலம் நியாசாதிகள் விஷேட திரவிய ஹோமம், ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி நிகழ்ச்சிகள் திருமறை திருமுறை பாராயணம் திருவருட் பிரசாதம்.

**11.04.2025 பங்குனி 28ம் நாள் வெள்ளிக்கிழனம :-** அதிகாலை 3.30 மணிமுதல் 10ாகாலம் யாகபூசை மஹாபூர்ணாகுதி நிகழ்ச்சிகள் திருமறை திருமுறைபாராயணம் மஹாதீபாராதனை காலை 7.00 மணி கும்பங்கள் யாகசாலையில் இருந்து புறப்பாடு காலை 8.07 மணி முதல் மேற்கு இராஜகோபுரம் மணிக்கோபுரங்கள் மூலவர்ஸ்தூபி பரிவார மூர்த்திகள் ஸ்தூபி கும்பாபிஷேகம் தொடர்ந்து காலை 9.36 மணிமுதல் விநாயக பெருமான் மூலவர் வள்ளி தேவசேனா சமேத கந்தசுவாமிப் "பெருமான் இதர பரிவார மூர்த்திகள் சித்விலாஸ மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து தசதரிசனம் மஹாபிஷேகம் விஷேட பூசை. கோபூசை நிகழ்ச்சிகள் திருமறை திருமுறை பாராயணம் திருவருட்பிரசாதம். பகல் 11.30 மணி முதல் பிரமுகர்கள் கௌரவிப்பு சிவாச்சாரியார்கள் கௌரவிப்பு கும்பாபிஷேக திருமலர் வெளியீடு பக்த கோடிகளுக்கும் சகல ஜீவராசிகளுற்கும் ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஆல வரலாறு

இதன் வரலாற்றினை ஆராய்ந்த தொல்லியல் வல்லுநர்கள் கி. மு. 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவுருவங்களை கண்டு உறுதிப்படுத்தி உள்ளனர். இத்திருத்தலத்தின் அற்புதத்தை. புராண இதிகாச சான்றுகள் கொண்டு ஆராய்ந்து சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய "சுப்பிரமணிய பராக்ரமம்" என்ற நூலில் மாவை கந்த பெருமான் அற்புதத்தை ஓர் அத்தியாயமாக பதிவிட்டுள்ளார். இத்திருக்கோவில் 7ஆம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த சோழ இளவரசி இங்கு வந்து வழிபட்டு சாப விமோச்சனம் பெற்றதை உறுதிப்படுத்தி வருகின்றது. அதற்கான சான்றுகள் இன்றும் மிளிர்ந்து கொண்டு இருக்கின்றன. அன்று சோழ இளவரசியின் வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டு சோழ அரசன் உக்கிரப் பெருவழுதி அங்கிருந்து சிப்பந்தியர்களை கொணர்ந்து ஐந்து திருவீதிகளும் ஆறு கோபுரங்களும் கொண்டு பிரம்மாண்டமான கோவிலை நிறுவியதுடன் தில்லைவனம் என்ற சிதம்பரம் திருக்கோவிலில் இருந்து விக்ரகங்கள் மற்றும் வேண்டிய உபசாரப்பொருட்கள் சகிதம் எமது முன்னோர் பரம்பரையினராகிய தீக்ஷிதர்களையும் அனுப்பி, திருக்குடமுழுக்கு பெரும் சாந்தி விழா நடாத்தியதை எமது சந்ததியினர் வழிவழியாக நினைவு கூருவர். இன்றுவரை ஆதீனக்கர்த்தாக்களும், இசைக்கலைஞர்களும், ஏனைய சிப்பந்திகளும் தலைமுறை தலைமுறையாக ஆதீனப்பேரரசுவை வழிநடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

13ஆம் நூற்றாண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த யாழ்ப்பாண அரசர்கள் இத்திருத்தலத்தை தரிசித்து வந்தனர். இவ்வாறு இலங்கை என்று அழைக்கப்படும் ஈழத்தில் உள்ள மக்களை அருளாட்சி செய்து வந்த மாவை திருத்தலம் அன்னியர் படையெடுப்பினால் 16ஆம் நூற்றாண்டு பறங்கியரால் அழிக்கப் பெற்றது. அதன் தடயங்கள் இன்றும் காணப்படுகின்றது. பிரிட்டிஸ்காரர் ஆட்சியில் எமது முன்னோர்கள் இத்திருத்தலத்தை செம்மையாக புனரமைப்பு செய்து, முன்னர் போல் நித்திய பூஜைகளும், 31 நாட்கள் சிறப்பான மகோற்சவ திருவிழாக்களும் நடாத்தி வந்தனர். இந்நிலையில் இலங்கையில் நடந்தேறிய உள்நாட்டு போரினால் 1990ஆம் ஆண்டு இப்பிராந்திய மக்கள் அனைவரும் வெளியேற, கோவிலின் பெரும்பகுதியும், தங்க விக்கிரகங்கள், வெள்ளி கொடித்தம்பம். பஞ்ச இரதங்கள் முதலான சகல வாகனங்களும், பல கோடிரூபா பெறுமதியான அசையும் அசையாச் சொத்துக்களும் அழிவுற்றன. கொள்ளையடிக்கப்பட்டன, அவை விபரிக்க முடியாத பேரழிவு.கடந்த பல ஆண்டுகளாக, நலிவுற்ற மக்கள் துணை கொண்டு, கோயில் வேலைகள் நடைபெற்று வந்த வண்ணம் உள்ளன. மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் பண்டு தொட்டு பாரததேசத் திருநாட்டிற்கும் ஈழத் திருநாட்டிற்கும் இடையேயான சமய கலாசார பிணைப்புகளுக்கு ஆதார சக்தியாக உள்ளது.மேலும் தங்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும், ஆதரவுகளையும் தந்துதவுமாறு இத்தால் அன்புடன் விண்ணப்பிக்கிறேன்.

**வாழ்க வளர்க தமிழும் சைவமும்.**
**பண்பாடும் ஒற்றுமையும் சமாதானமும் சாந்தியும் நிலவுவதாக**

*ஹர ஹர சிவாய – சிவாய நம ஓம்!*

**S. Subramaniam & Co. (Pvt) Ltd.**

கோயில் அபிஷேகம், பூசை, திருமணம், புதுமனை புகுதல் போன்ற விசேஷ கைபவங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்கள் விபூதி, சந்தனம், குங்குமம், புனுகு ஜவ்வாது, குங்குமப்பூ, கஸ்தூரி போன்றவைகளும், மின்சார மருந்து, குழந்தைகளுக்குத் தேவையான பொன்னாங்கண்ணித் தைலம், பிரம் கோரோசனை, முக்கூட்டு மாத்திரை போன்றவைகளுக்கும் கரீசலாங்கண்ணித் தைலம் (அல்லான) தைலம் போன்ற கூந்தல் தைலங்கள். கோயில் பட்டுக்குடை போன்ற அனைத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடியதும் ஆயுர்வேத மருந்து பொருட்களும் கிடைக்கும் பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

**160 Sea Street, Colombo 11. Tel: 011 243 5825**

மைதிலி நகைமாடம் | யாழ் மைதிலி ஜுவல்லர்ஸ்
89V கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | 79Z செட்டியார் தெரு, கொழும்பு - 11
T.P: 021 222 7902 | T.P: 011 239 6239
E - mail : maithilynagaimaadam89@gmail.com

நியூ உதயா ஜுவல்லர்ஸ்
இல: 91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 2031
e-mail: newuthayajwellrs@gmail.com

சிறி மீனாட்சி நகை அகம்
இல.177B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel + 94 21 222 6109

நியூ மைதிலி மற்றும் சந்தோஷ் ஜுவலர்ஸ்
இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். newmaithily40@gmail.com newmaithily Jewellers 0094 21 221 7878
இல. 97A, 99V மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் Tel : 021 221 1177 santhoshjewellers1188@gmail.com santhoshjewellers 021 221 1188

கன்னிஹா ஜுவலர்ஸ்
இல.99E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 4448

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக





# 11.04.2025 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின்

## பங்குனி உத்தரப் பொங்கலை முன்னிட்டு வெளிவரும் சிறப்புக் கட்டுரை

சுமார் நானூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட நாகதம்பிரான் ஆலயத்தில் பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்ற அரசமரத்தில் வீற்றிருந்து அருள்புரிந்து கொண்டிருக்கின்ற பாம்புத் தெய்வம் ஒரு மானிடத் தாயின் வயிற்றில் பிறந்து பின்பு தெய்வமாக மாறியது என்பதே வரலாறு.

ஈழவள நாட்டின் அப்போதைய யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்தது கரைச்சிப் பிரதேசமாகும். இப் பிரதேசம் பல தரப்பட்ட வளங்களையும் சிறப்புக்களையும் கொண்டு மேலோங்கி இருந்தது. இப் பிரதேசத்தின் புளியம் பொக்கணை என்ற ஊரில் பெருத்த நெற்காணி களையும், கால்நடைகளையும் இன்னும் பல தரப்பட்ட செல்வங்களையும் கொண்டு பெரும் செல்வந்தராக வாழ்ந்தவர் தான் நீதி நாயக முதலியார். இவருடைய மனைவி பெயர் கமலம். இவர்கள் இருவரும் இல்லற வாழ்வில் செல்வச் செழிப்போடு அன்பு கொண்டு இரண்டு உடலிற்கு ஒரு உயிர் போல ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர் இவ்வாறு வாழ்கின்ற போது அவர்கள் பிள்ளைச் செல்வம் இல்லாது பெரும் துயர் கொண்டனர்.

இந்நிலையில் இவர்கள் தங்கள் மனத்துயர் நீங்கும் பொருட்டு சிவபெருமானையும் உமையம்மையாரையும் வேண்டி விரதம் இருந்து அன்னதானம் வழங்கி பல தரப்பட்ட தர்ம காரியங்களையும் செய்து வருகின்ற காலத்தில் கமலம் அம்மையார் கருவுற்று ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். பெருமகிழ்வு கொண்டு குழந்தைக்கு தங்கள் குலப் பெருமை சார்ந்து மாப்பாண முதலி என்று பெயர் சூட்டி அன்போடு வளர்த்து வந்தனர். தொடர்ந்து அவர்கள் ஆற்றிய விரதங்கள் பூசைகள் மற்றும் நற்காரியங்களின் பயனாக கமலம் அம்மையார் மீண்டும் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்கும் தங்கள் பரம்பரைக்கு ஏற்ப வவணிய முதலி என்று பெயரிட்டு இரண்டு குழந்தைகளையும் கண்கள் போல பாதுகாத்து கவனமாக வளர்த்து வந்தனர். குழந்தைகள் இருவருக்கும் உரிய காலங்களில் கல்வி கொடுத்து அறிவூட்டி உறவினரும் ஊரவரும் மதிக்கும்படி நல்ல பிள்ளைகளாக கண்டு மகிழ்ந்தனர். பிள்ளைச் செல்வம் இல்லை என்ற பெரும் துயர் தீர்ந்த போதும் பெண் பிள்ளை ஒன்று வேண்டி ஈஸ்வரன் உமையம்மையை நினைந்து விரதமிருந்து சொல்லப்பட்ட அறச் செயல்கள் எல்லாம் வரைவின்றி செய்து வருகின்ற காலத்தில் கமலம் அம்மையார் பங்குனி மாதத்தில் வருகின்ற உத்தர நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய நல்ல நாளில் ஒரு பாம்புக் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் இரட்டைக் குழந்தை களாகப் பெற்றெடுத்தார். பாம்புக் குழந்தையைக் கண்ட உறவினர்கள் வியந்து பார்த்து ஒரு தடியை எடுத்து அந்தப் பாம்பை மெல்லத் தூக்கி வெளியில் போட்டார்கள். அப்போது அந்த பாம்புக் குட்டி மெல்ல நகர்ந்து வந்து அந்த தாயாரின் மடியில் ஏறிப் படுத்துக்கொண்டது. இதை அவதானித்த தாயார் இது சிவனுடைய செயல் என்று எண்ணி பாம்புக் குழந்தையையும் பெண் குழந்தையையும் பாலூட்டி வளர்த்தார். இதைக்கண்டு தந்தையாரும் மகிழ்வடைந்தார். பாம்புக்குழந்தை பிறந்த பின்பு இவர்களுக்கு முன்பு இருந்த செல்வம் பல்மடங்கு பெருகி குபேர செல்வந்தராக விளங்கினார். பிறந்த பாம்புக்குழந்தைக்கு தம்பிரான் என்று பெயரிட்டு கூடிப் பிறந்த பெண் குழந்தைக்கு வள்ளிநாச்சன் என்ற பெயரையும் வைத்தனர்.

பிள்ளைகள் வளர்ந்து ஆண் பிள்ளைகள் வாலிபர்களாகினர். பெண் பிள்ளையும் மங்கைப்பருவம் அடைந்தார். சில ஆண்டுகள் கழிய பிள்ளைகளுக்கு உரிய முறைப்படி திருமணம் செய்து வைத்து தனித் தனி இல்லங்களில் வாழ வைத்தனர். பாம்புக்குழந்தையான தம்பிரான் தாய் தந்தையருடன் தாய்மனையில் வாழ்ந்து வந்தது. இவ்வாறு வாழ்ந்து வருகின்ற காலத்தில் முதுமை அடைந்த தந்தையார் தன்னுடைய வயல் நிலங்கள் மற்றும் தனக்கிருந்த சகலவிதமான சொத்துகள் பொருள், பண்டங்கள், யாவற்றையும் மூன்று பிள்ளை களுக்கும் பகிர்ந்து கொடுத்து அதற்கு சாசனம் எழுதிக்கொண்டிருந்தார். அச்சமயம் அங்குவந்த பாம்புக்குழந்தையான தம்பிரான் மிகுந்த கோபங்கொண்டு சீறிப்படமெடுத்து எழுதுகோல் மற்றும் ஆதனம் எழுதப்பட்ட ஓலைச் சுவடி என்பவற்றை கோபத்துடன வாயால் வெட்டிச் சிதறி எறிந்தது.

இதனைக்கண்ட தாய் தந்தையார் சற்று யோசித்து தனக்கும் பங்கு வேண்டும் என்று விரும்புவதை உணர்ந்து மீண்டும் நான்கு பங்காகப் பிரித்து சாசனம் எழுதிவைத்தனர். அப்போது தம்பிரான் வேகமாக வந்து தன்னுடைய பங்கை வாயாலே எடுத்து தங்கையின் பங்குடன் சேர்த்து இதுவும் உனக்கே என்று சைகை மூலம் காட்டி நின்றது. இதன் பின்பு சர்ப்பக்குழந்தையான தம்பிரானுடன் இன்னும் பல பாம்புகளும் கூடி அந்த வீட்டிலே வாழ்ந்தன. ஒருநாள் காலைப்பொழுது தாயார் கமலம் அம்மையார் வீட்டு முற்றத்தைக் கூட்டிக் குப்பைகளைக் குவித்துக் கொண்டிருந்த போது இந்தப் பாம்பும் மற்றைய பாம்புகளும் சேர்ந்து குவிக்கப்பட்ட குப்பைகளை எல்லாம் உழக்கி சிதறி தாயாரை கூட்டவிடாமல் அவர் மீது ஏறிச்சுற்றி நடக்கமுடியாமல் கால்களையும் வாலினால் பிணைத்து தொந்தரவு செய்தன. இதைப் பொறுக்க முடியாமல் தொலைந்துபோ என்று சொல்லி கூட்டு மாறினால் தட்டிய போது கோபம் கொண்ட பாம்பு தன்னை பத்துமாதம் சுமந்து பெற்ற தாயென்று எண்ணி கோபம் தணிந்து வீட்டை விட்டு வெளியேறியது. இதை அறிந்த மற்றைய பாம்புகளும் அதன் பின்னே சென்று மறைந்தன. நித்திரை விட்டெழுந்த தந்தையார் எங்கே பிள்ளைகளைக் காணவில்லை என்று கேட்ட போது மனைவி நடந்தவற்றைக்கூறி வீட்டு வாசலால் போனதைக்கண்டு நான் தேடிப்பார்த்தேன் காணவில்லை என்று சொன்ன போது தந்தையும் மற்றைய பிள்ளைகள் உறவினர் எல்லோரும் சேர்ந்து கரைச்சி நாடு முழுவதும் தேடியும் காணாமல் தாயும் தந்தையும் மனம் வருந்தி உணவும் அருந்தாமல் படுத்தபடி சற்று உறங்கிவிட்டனர். இவ்வாறு உறங்கிய நீதி நாயக முதலியாரின் கனவில் அந்தணர் வடிவில் தோன்றிய சிவபெருமான் கவலைப்படாதே எம்மால் படைக்கப்பட்ட பாம்பினது வாழ்வுக்காலம் முடிவடைந்ததால் யாரும் காணாதவண்ணம் மறைந்து விட்டது. மற்றைய பாம்புகள் கொக்காவில் என்ற வனப்பகுதி ஊடாக வன்னி நாட்டின் புதூர் என்ற சோலையில் பாலை மரத்தடியில் படுத்திருக் கின்றன. உரிய வரிசை வாத்தியங்களுடன் அங்கு சென்று அழைத்து வந்து ஏற்ற இடத்தில் வைத்து பூசை ஆராதனை செய்து வழிபட்டு நலம் பெறுங்கள் என்று கூறி மறைந்தார். அதன் படி சொல்லப்பட்ட வரிசை வாத்தியங்களுடன் தொண்டர்கள் சகிதம் அங்குசென்று கனவில் கண்டபடி பாம்புகளைக் கண்டு பயபக்தியுடன் அழைத்த போது வருகைதந்த பாம்பை சுமந்து வந்து உரிய முறைப்படி அரச மரத்தடியில் பந்தல் அமைத்து அங்கு வைத்து பூசை ஆராதனைகள் செய்து நிவேதனமாகப் பாலும், பழமும் வைத்து வழிபட்டு வந்தனர்.

இவ்வாறு பங்குனி மாதத்திலே வருகின்ற உத்தர நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடுகின்ற நாளுக்கு எட்டு நாளைக்கு முதல் விளக்கு வைப்பு வைபவத்துடன் ஆரம்பமாகி பண்டம் எடுத்து செல்வதுடன் தொடங்கி மீசாலை புத்தூர் சந்தி வரை சென்று பண்டம் கொண்டு வருதல். பண்டம் எதிர்கொள்ளல் என்ற சிறப்புநிகழ்வுகளோடு பொங்கல் விழா சிறப்பாக நடைபெறும். இவ்வாறு நடை பெற்று வருகின்ற காலத்திலே ஒல்லாந்தரின் ஆட்சியின் போது பூசகர் சகிதம் மாட்டுவண்டியில் பண்டம் கொண்டு வந்து கண்டாவளை மடுக்கரை என்ற பண்ட மரவடியில் தரித்து நின்றனர். அச்சமயம் அவ்வழியாக வந்த ஒல்லாந்த அதிகாரி இவர்களைக்கண்டு அங்கு நடப்பதை அறிவதற்காக பூசகரை அழைத்துக் கேட்டு அறிந்து கோபம் கொண்டு எங்களுடைய ஆட்சியில் இப்படிச் செய்வது குற்றம் என்று சொல்லிப் பயமுறுத்தினான். அப்போது பூசகர் மிகவும் மனம் வருந்தி பயத்தோடு எமது மூதா தையரின் வழியில் ஆண்டு தோறும் குலதெய்வமான பாம்புத் தெய்வத் திற்கு பொங்கல்விழா செய்து வருகிறோம் என்று கூறினார். இதைக் கேட்ட ஒல்லாந்த அதிகாரி மிகுந்த கோபம் கொண்டு இப்பொழுது இங்கே உங்கள் தெய்வத்தைக் காண்பிக்க வேண்டும் இல்லையேல் இங்கிருப்பவர்களை சுட்டுத்துரத்தி இங்குள்ள பொருட்களையும் எடுத்து எறிவேன் என்றான் சற்றும் தயக்கமின்றி பூசகர் இப்பவே தெய்வத்தைக் காட்டுகிறேன் என்று சொல்லி தோய்ந்து அனுட்டானம் பார்த்து தொண்டர்களின் உதவியுடன் வளந்து என்று சொல்லப்படுகின்ற புதுப்பானை ஒன்று எடுத்து கழுவி எல்லோரும் பார்க்கும் படி வெள்ளைத் துணி ஒன்று எடுத்து முறுக்கி அதனுள் வைத்து பக்தி பூர்வமாக பூசை செய்து இறைவா இந்த மாற்றுச்சமயத்தவரிடமிருந்து எம்மைக் காத்தருள வேண்டும் என்று வேண்டி நின்றார். அந்த நேரம் எல்லோரும் அதிசயிக்கும்படி அந்த வளந்தினுள்ளிருந்து ஐந்து தலைப்பாம்பு வெளிப்பட்டுக்காட்சி கொடுத்தது. இதைக்கண்ட ஒல்லாந்த அதிகாரிகள் தொண்டர்களைப்போல தாங்களும் கரம் கூப்பி வணங்க பாம்பு மறைந்தது. தங்களுடைய தவறுக்காக பூசகரிடம் வருத்தம் தெரிவித்து எந்தவித இடையூறுமின்றி உங்கள் பூசைகளை நடாத்தி பயணித்து பொங்கல் விழாவையும் சிறப்பாக நடாத்துங்கள் பொங்கல் அன்று நாமும் வருவோம் என்று கூறிச் சென்றனர். அதன்பின்பு பங்குனி உத்தரம் பொங்கல் தினத்தன்று நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது வருகைதந்த ஒல்லாந்த அதிகாரி தான் கண்ட பாம்பின் திருவுருவத்தை ஐம்பொன்னினால் வடிவமைத்துக் கொடுத்து ஆலயக் கட்டுமானத்திற்கு நிதி உதவியும் செய்து சென்றான். இவ்வாறான வரலாற்றுச் சிறப்பும் புதுமையும் கொண்ட நாகதம்பிரான் ஆலயத்தில் சிவனுக்கும் நாகதம்பிரானுக்கும் தனித்தனி மூலாலயங்கள் அமைந்துள்ளன. அதே போன்று தனித் தனியாக இராச கோபுரமும் மணிமண்டபமும் அமையப் பெற்று சிவனுக்கு கொடியேற்ற திருவிழாவும் நடைபெற்று பல்லாயிரம் அடியவர்களின் இன்னல் போக்கும் வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது

திருச்சிற்றம்பலம்

கலைக்கிளி மயில் வேலாயுதபிள்ளை
ஓய்வு நிலை உப அஞ்சல் அதிபர்
புளியம்பொக்கணை

விளம்பர அனுசரணையாளர்கள்

நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய, பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலம்புகள் அனைத்திற்குமான நீர்க்கசிவைத் தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களைப் பெற்றும் சீர்செய்யலாம்.

தரம் குறைந்த போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

10 வருட உத்தரவாதம் உண்டு.
உலகத்தரம் மிக்க இரசாயனப் பொருட்கள் Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக விநியோகத்தர்கள். முதன் முதலில் வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள்.

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

FINEX

சிவகுரு
Motors & Motor Bike
விற்பனை நிலையம்
தரணீஸ்
Motors
A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி
T.P: 021 228 5380, 077 741 8940, 077 772 2305



சிவகுரு
ஹாட்வெயார்
Sivaguru
Hardware
Tokyo cement (Nippon cement)
Rhino Sheet
T.P: 077 772 2305, 076 014 4481, 076 102 4481

நிகல்யா நிகலரசி வாணியம்
Nikalya Nikallarasi Vanipam
A9 வீதி, கிளிநொச்சி. A9 Road, Kilinochchi



கிளை: 154ஆம் கட்டை
A9 வீதி, கிளிநொச்சி.

TP : 021 228 5383 Branch: 154th Milepost
021 228 5565 A9 Road, Kilinochchi
Mobile: 077 817 1503



ஐங்கரன்
நகைமாடம்
IEYNKARAN
NAGAIMADAM
பழைய கச்சேரி முன்பாக, யாழ் சாலை, கிளிநொச்சி.
Jaffna Road, Kilinochchi.
T.P : 077 104 1299, 021 228 3377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ்க்கட்சிகளின் இணைவு சுமந்திரனாலேயே கானலானது

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10
தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனாலேயே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு புள்ளியில் சந்திப்பது பகற்கனவாக, கானல் நீராக மாறியது என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுக நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடாளுமன்றத்தில் 19 தமிழ் உறுப்பினர்கள் உள்ளபோதும் 10 உறுப்பினர்களைக்கொண்ட அறுதிப்பெரும்பான்மை ஒருவருக்கும் இல்லை. நாம் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளை முன்னெடுத்தபோதும் அது சாத்தியப்படவில்லை. தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானத்துடன் பேசியபோது அதற்குக் குழு அமைப்பதாகச் சொல்லியிருந்தார். அதன்பின்பு சுமந்திரன் பொதுச்செயலாளராக வந்த பின்பு அந்த விடயம் தேவையில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. தற்போது தமிழரசுக்கட்சியை ஆட்சி செய்பவர்கள் தமிழ்த்தேசிய நீக்க அரசியலைக் கொண்டுசெல்பவர்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இனவழிப்பு இலட்சியப் பற்றுறுதியுடன் பயணித்த எமது இனத்தின் இருப்பு கேள்விக்குறியாக்கியுள்ளது. தமிழ்த் தேசத்துக்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை வழங்கும் தேர்தலாக இந்தத் தேர்தல் அமைகிறது. இந்தத் தேர்தலில் சரியான முடிவை மக்கள் எடுக்க வேண்டும்- என்றார். (ச-113)



# அமெ. தூதுவரை சந்தித்தார் சஜித்

கொழும்பு, ஏப். 10
இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையே சந்திப்பு நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.
சந்திப்பின்போது அமெரிக்க இலங்கை வர்த்தகத் தொடர்பை சமநிலையில் முன்னேற்றுவது தொடர்பாக இருவரும் கலந்துரையாடினர்.
ஒரு நியாயமான வர்த்தக இயக்கவியல் இரு நாடுகளுக்குமான பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கும் என இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# மோடியுடன் நாமல் சந்திப்பு

கொழும்பு, ஏப். 10
இலங்கை பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்தித்துள்ளார்.
இந்தியாவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான, ரைசிங் பாரத் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது..
இது தொடர்பில் நாமல் ராஜபக்ச தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,
பிரதமர் நரேந்திரமோடியின் வலுவான தலைமையின் கீழ் இந்தியாவின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்துவருவதால் நவீன உலகில் இந்தியா அதிக உயரங்களை எட்டியுள்ளது - என்றுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 தேர்தல் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 10
தேர்தல் அறிவிக்கப்பட்டு இதுவரையான காலத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த முறைப்பாடு கள் மீதான மேலதிக சட்ட நடவடிக்கை கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ம-125)

# முல்லைத்தீவு மக்கள் போராட்டத்தால் கசிப்பு வியாபாரிகளின் வீடுகள் முற்றுகை

## 6 பேர் அதிரடிக் கைது



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கசிப்பு விற்பனை செய்யும் வீடுகள் முற்றுகையிடப்பட்டு 6 பேர் அதிரடியாகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
புதுக்குடியிருப்புப் பிரதேச பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் கசிப்பு வியாபாரம் அதிகரித்து காணப்படுவதாக கடந்த 6 ஆம் திகதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட மூன்று குடும்பங்கள் மக்களால் இனங்காணப்பட்டு வீட்டுப் படலைகளில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டன. இந்த நிலையில் கசிப்பு வியாபாரம் செய்து வந்த வீடுகளை புதுக்குடியிருப்புப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து நேற்றுப் புதன்கிழமை தேடுதல் நடவடிக்கை முன்னெடுத்தனர். இதன்போது ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 16. 5 லீற்றர் கசிப்பும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)

## யாழ்ப்பாணம் மாவட்டக்கூட்டுறவுச் சபை

### கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டிடத் தொகுதியின் மலசலகூடங்களில் கழிவு நீர் வெளியேற்றும் பைப் லைன் சீரமைத்தலுக்கான கூறுவிலை கோரல்

மேற்படி கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் கட்டிடத் தொகுதிகளின் 4 மாடிகளிலும் உள்ள மலசலகூடங்களின் கழிவுகள் வெளியேறும் (பைப்லைன்) குழாய் வழியில் உடைவு ஏற்பட்டு நீர் வெளியேறுகின்றது. இந்த குழாய் வழி விநியோகத்தை சீர்ப்படுத்துவதற்கு புதிதாக பைப் லைன் செய்ய வேண்டியுள்ளது.
உயர்தரத்தினை கொண்ட பொருட்களின் மூலம் இவ் வேலையை செய்து முடிப்பதற்கான கூறுவிலையினை வேலை தொடர்பாக நேரடியாக பார்வையிட்டு இவ் வேலைகளில் ஈடுபடும் தரப்பினர்களிடமிருந்து வேலைக்கான பொருட்களின் தரம், தொகை அவற்றுக்கான பெறுமதி மற்றும் வேலைக்கான கூலி என்பவற்றினை மூடிய தபால் உறையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
கூறுவிலை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதி 19.04.2025 சனிக்கிழமை மு.ப 12.00 மணி வரை வேலைகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டுக் கொள்ள முடியும்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டிடத்தொகுதி
2ஆம்மாடி, இல 12, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

செயலாளர்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை
(CR/0004) J-1

## மரண அறிவித்தல்

### அமரர் இரசரத்தினம் இராஜகோபாலன்

கொக்குவில் அச்சுக்கூட வீதியைச் சேர்ந்த இரசரத்தினம் இராஜகோபாலன் நேற்று (09.04.2025) புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2025) வியாழக்கிழமை நண்பகல் அச்சுக்கூட வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 04 . 1948



மறைவு
09 . 04 . 2025

### குமாரசாமி மகேஸ்வரன்


இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி மகேஸ்வரன் நேற்று (09.04.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - இராசம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கலைநிலா அவர்களின் அன்புத் தந்தையும், சுகந்தனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சதானந்தம் மற்றும் மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரவதி, காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், பத்மநாதன் மற்றும் கமலநாதன், சந்திராதேவி, காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் இரத்தினேஸ்வரி, பஞ்சநாதன், மதனேஸ்வரி, சத்தியநாதன், சிவகுருநாதன் ஆகியோரின் மைத்துனரும், அக்ஷயன், இந்துயா, அபிஸ்கா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
074 180 9614

உடுவில் மகளிர் பாடசாலை,
மேற்கு வீதி, சுன்னாகம்.
(CS/2929) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 03 . 1936



மறைவு
09 . 04 . 2025

### கந்தையா கணேசலிங்கம் (துரையர் - சின்னத்தம்பி)

கொலலங்கலட்டி சடச்சப்பையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேசலிங்கம் அவர்கள் நேற்று (09.04.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இராஜலஷ்மி மற்றும் இராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துனரும், பரமசிவம், இராசநாயகி, கேதீஸ்வரன், சிவரூபன், சிவரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், தனவாணி, பத்மசீலன், ரோகிணி, அனுசியா, சிவபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்கினேஸ்வரன், குகனேஸ்வரன், சிவனேஸ்வரன், ஞானசரஸ்வதி ஆகியோரின் சிறியதந்தையும், காலஞ்சென்றவர்களான புஷ்பநாதன், வசந்தநாதன் மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் தாய் மாமனும், மௌரிகன், கஜலக்ஷ்மன், நிகேதன், கீர்த்தகன், இராகுலன், சிவாஜினி, திருக்குமரன், அனுவர்ஜிதன், சிவகஸ்தனி, அவிக்னன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சடச்சப்பை,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.
(CR/0007) J-1

தகவல் : குடும்பத்தினர்
077 661 2116, 077 664 7467

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 6 இல் மாணவர்களை உள்ளீர்க்கும் காலம் நீடிப்பு

கொழும்பு, ஏப். 10
2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின்படி, மாவட்ட வெட்டுப்புள்ளிக்கு மேல திகமான புள்ளிகளைப்பெற்று தகுதிபெற்ற மாணவர்களுக்கு, 2025 ஆம் ஆண்டில் தரம் 6இல் புதிய பாடசாலைகளில் இணைப்பதற்கு விண்ணப்பிப்பதற்கு இம்மாதம் 30 ஆம் திகதிவரை காலவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஒன்லைன் முறை மூலம் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்புமாறு கல்வி அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.
http://g6application.moe.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் அதிகபட்சமாக மூன்று பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.
கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk இல் விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கர்ப்பிணி உயிரைப் பறித்த பரிந்துரையற்ற மருந்து

கொழும்பு, ஏப். 10
மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் ஒரு தனியார் மருந்தகத்தில் வாங்கிய மருந்தை உட்கொண்டதால் மூன்று மாதக் கர்ப்பிணிப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.
அவிசாவளையைச் சேர்ந்த 42 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
குறித்த கர்ப்பிணிப் பெண் கணவருடன் அவிசாவளைப் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருந்தகத்துக்குச் சென்று, தனது கர்ப்பத்தைக் கலைக்க மருந்தைக் கேட்டுள்ளார்.
அந்த மருந்துக்கடையில் அவரது உடலில் செலுத்துவதற்கான மருந்தும், குடிப்பதற்கான மருந்துக்கலவையும், மாத்திரைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை உட்கொண்டதால் அவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, உடனடியாக ஹோமகம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-சி)



வலிகாம வலய மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி யில் உடுவில் மகளிர் கல்லூரியின் 20 வயதுப்பிரிவினர் முதலாம் இடத்தையும் 16 வயதுப்பிரிவினர் இரண்டாம் இடத்தையும் 18 வயதுப்பிரிவினர் மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-125)

## ஜி.எஸ்.பி. பிளஸ்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை இலங்கையே ஐரோப்பிய ஒன்றியத்திடம் கேட்கிறது. எனவே, அந்தச் சலுகையைக் கேட்டால் அதற்கேற்றவாறு இலங்கை நடந்துகொள்ளவேண்டும். அவ்வாறு நடந்துகொள்ளாமல் விட்டுவிட்டு, எங்களது நிபந்தனைகளைத் தளர்த்துமாறு எம்மிடமே இலங்கை கோரமுடியாது.
அத்துடன், ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியிருக்கின்ற சலுகையை இலங்கை முழுமையாகப் பயன்படுத்தவில்லை. அதனை முழுமையாகப் பயன்படுத்தினால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதியை இரண்டு மடங்காக அதிகரிக்கமுடியும்.
எனினும், அரசாங்கம் உரையாடலைத் தொடங்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இன்னும் எதையும் செய்யவில்லை என்றால், ஏன்? என்ன தடைகள் உள்ளன? என்பதையாவது கூறவேண்டும். அனைத்து விடயங்களும் இன்றைய தினத்திலேயே (உடனுக்குடன்) தீர்க்கப்படவேண்டும் என்று நாங்கள் கோரவில்லை. ஆனால், கலந்துரையாடல்கள் அவசியம். தெளிவூட்டல்கள் தேவைப்படுகின்றன.
முக்கியமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு நாங்கள் தொடர்ந்து கூறிவருகிறோம். ஆனால், அரசாங்கம் அதனை நீக்கவில்லை. அந்தச் சட்டம் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இதற்குப் பதிலாக கடந்த அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட புதிய சட்டமும் மிக மோசமானதாக இருக்கிறது. எந்தச் சட்டமும் சர்வதேச சட்டங்களையும், மரபுகளையும் பின்பற்றுவதாக அமையவேண்டும்-என்றார். (அ-ம-இ)

## சர்வகட்சிக்...

நடைபெறவுள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.
இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதிபர் ட்ரம்ப், 44 சதவீத வரி விதித்துள்ளார். இதனால் இலங்கையின் ஆடை ஏற்றுமதி உள்ளிட்ட துறைகள் ஆட்டம் காணும் என எதிரணிகள் எச்சரித்துள்ளன. அதேபோல மாற்று வழிமுறைகள் பற்றி ஆராயவேண்டும் எனவும் யோசனை முன்வைத்துள்ளன. இது தொடர்பில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கு சர்வக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டுமாறும் அழைப்பு விடுத்தன. இதற்கமையவே மேற்படி கூட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (அ-ம-44)

## அமெரிக்க...

இது தொடர்பில் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
அமெரிக்காவின் பரஸ்பர வரிவிதிப்பு தற்போது உலகளாவிய பதற்றத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது. அமெரிக்காவுக்கு எதிரான சீனாவின் வரிகள் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளன.
இந்த வர்த்தகப் போரால், இலங்கை போன்ற சிறிய நாடுகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. சிலவேளைகளில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டாலும், ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்கு முன்பிருந்த நிலைக்குக் கட்டணங்கள் திரும்பாது என்பதை உறுதியுடன் கூறிக்கொள்ள முடியும். ஆதலால், இந்த மாறுபட்ட பொருளாதாரச் சீர்குலைவு வேலையிழப்புகள் ஏற்படவும் காரணமாக அமையும் -என்றார். (அ-ம-இ)

## 56,000...

என என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்குக் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகளாலும், அதிகரித்துள்ள தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளாலும் மீனவக் குடும்பங்கள் கணிசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன. 46 ஆயிரம் மீனவக் குடும்பங்களும், 10 ஆயிரம் மீனவப் பெண்தலைமைக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.
எனவே, வடபகுதி மீனவக் குடும்பங்களின் நலன்கருதி, இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கடற்றொழில் அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.
அத்துடன், தற்போதைய மீன்பிடி அமைச்சின் உயர் அதிகாரிகள் இலஞ்சம் பெற்று தடைசெய்யப்பட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை ஊக்குவிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறானநிலை மாறவேண்டும். எமது மீனவர்கள்படும் துயரங்கள் எண்ணிலடங்காதவை.
இந்தக் கோரிக்கைகளை நாம் மீண்டும் மீண்டும் முன்வைக்கின்றோம். இந்த விடயத்தில் தீர்வொன்று வழங்கப்படாத பட்சத்தில், போராட்டங்களை நடத்தவும் நாம் தயாராகவுள்ளோம்-என்றார். (அ-ம-26-246)

## மேலும்...

மூல வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய மேலும் ஆறு சபைகளுக்காக வாக்காளர் விநியோக அட்டைகள் இன்று விநியோகிக்கப்படவுள்ளன.
இதன்படி, வல்வெட்டித்துறை நகரசபை, வலிகாமம் வடக்குப் பிரதேசசபை, வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை, வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, பருத்தித்துறைப் பிரதேசசபை, சாவகச்சேரிப் பிரதேசசபை ஆகியவற்றுக்காக வாக்காளர் அட்டைகளே இன்று விநியோகிக்கப்படவுள்ளன. (அ-ம-26)

## நாவற்குழியில்...

மேற்படி நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட பெண்கள் 40, 42 மற்றும் 53 வயதுடையவர்கள் என்றும், விடுதியை நடத்திவந்த உரிமையாளர் 68 வயதுடையவர் என்றும் பொலிஸார் தமது விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-26-28)

## வெள்ளியில்...

யேற்றப்படவுள்ளது.
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில், இன்று முதல் எதிர்வரும் 13ஆம் திகதிவரை மாலை 6.45 மணிக்கு இந்த ஆற்றுகை இடம்பெறவுள்ளது. (அ-ம-இ)

## அளவுக்கதிக...

கடந்த 5ஆம் திகதி அவர் மாத்திரைகளை உட்கொண்டுள்ளார். எனினும், தூக்கத்தில் இருந்து நீண்டநேரமாக எழாததைத் தொடர்ந்து, அவர் மயங்கிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், நேற்றுமுன்தினம் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தமிழர்களின்...

நாதன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்தார். அவரின் விஜயத்தின் போது இரண்டு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இந்த நடவடிக்கை சீனாவுக்கு வலிக்கும், அமெரிக்காவுக்கு வலிக்கும் என சீனாவின் அடிவருடிகள் கருத்துகளைக் கூறிவருகின்றனர்.
இலங்கை நெருக்கடியை எதிர்கொண்ட வேளை இந்தியாவே முதலில் உதவியது. எனவே, ஒப்பந்தங்கள் சரியானவை. அவற்றை சீன அடிவருடிகள் குழப்ப முற்பட்டால், நாம் அதனை எதிர்த்து நிற்போம். வடக்கு, கிழக்கில் சீனாவின் எந்த வொரு நடவடிக்கை இடம்பெறுவதையும் நாம் அனுமதிக்கமாட்டோம்-என்றார். (அ-ம-44)

## காணாமலாக்கப்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில், யாருக்கெல்லாம் அநீதி இழைக்கப்பட்டதோ அவர்கள் அனைவருக்கும் நீதியையும் சமத்துவத்தையும் வழங்குவதற்கு அரசாங்கம் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் உள்ளது. ஆனால், இந்த விடயங்கள் சட்டரீதியாகவும், நிறுவனமயப்பட்டும் செய்யப்படவேண்டும்.
கடந்தகாலத்தில் ஏற்பட்ட நிறுவன ரீதியான தோல்விகளும், முறைமைரீதியான தோல்விகளுமே இந்த விடயங்களில் தாமதத்துக்கு முதன்மையான காரணங்களாகும். எனவே நாம் அந்த விடயங்களில் கவனம் செலுத்தவேண்டும். இந்த விடயங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவேண்டும்.
நிவாரணம் வழங்கும் அலுவலகம் மற்றும் காணாமற்போனோருக்கான அலுவலகம் என்பன பெயரளவில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளதால், பொதுமக்களுக்கு அவற்றின் மீது நம்பிக்கை இல்லை. போதுமானளவு பலமில்லாமையாலும் அவை தோல்வியடைந்தன. ஆதலால், கடந்தகாலப் பலவீனங்களைச் சரிசெய்தே பயணிக்கவேண்டியுள்ளது. அவ்வாறே நாங்கள் பயணித்துவருகின்றோம் - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.04.2025 வியாழக்கிழமை

# சோலர் இணைப்பு அனுமதிக்கு கட்டணம் அறவிடப்படக்கூடாது

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சாரசபைக்கு உத்தரவு

**யாழ்ப்பாணம், ஏப். 10**

**சூரிய மின்கல புதிய இணைப்பு மற்றும் கட்டமைப்புக்கான நிறுவுதல் ஆகியவற்றுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து கட்டணம் எதையும் கோரமுடியாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சாரசபைக்கு அறிவுறுத்தியுள்ளது.**

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மின்பாவனையாளர் ஒருவர் கடந்த 2023 ஆம் ஆண்டு சோலர் இணைப்புக்காக விண்ணப்பித்தி ருந்தபோதும் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வாறு அனுமதிக்காக விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் வருடக்கணக்காகத் தேங்கிப்போயுள்ளன.

இந்தநிலையில் குறுகிய காலத்தினுள் சிலருக்கு முறையற்ற விதத்தில் அனுமதிகள் வழங்கப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்களுக்கு இணைப்பு வழங்குவதற்காக 11 இலட்சம் ரூபா கட்டமைப்புக் கட்டணமாக செலுத்துமாறு இலங்கை மின்சாரசபையால் கோரப்பட்டுள்ளது.

அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பலர் ஜனாதிபதியின் குறைகேள் அதிகாரிக்கும் இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கும் முறைப்பாடு செய்திருந்தனர். அதற்கமைய இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இடம் பெற்ற விசாரணையின் முடிவில், சோலர் இணைப்பு அனுமதி வழங்கும்போது, புதிய இணைப்பு மற்றும் கட்டமைப்புக்கான நிறுவுதலுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து இலங்கை மின்சாரசபை கட்டணம் எதையும் அறவிடமுடியாது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ச-10)


**நல்லூரில் காணி விற்பனைக்கு**

நல்லூர் வைமன் வீதியில் 1 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

(CS/57941) J-1

077 981 4551

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நல்லூரை அண்மித்த பகுதியில் அரச சார்பற்ற நிறுவனத்திற்கு அலுவலக தேவைகளுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

(CS/2924) J-1

077 919 1529

**கடை ஒன்று வாடகைக்குத் தேவை**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி மற்றும் கே.கே.எஸ் றோட் ஆகிய பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

(CS/2924) J-1

077 919 1529

**சமையலாள் தேவை**

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

(CR/40007) J-1

077 959 2628



# சட்டவிரோத மாட்டிறைச்சி 36 கிலோ கைப்பற்றல்!

முல்லைத்தீவு, ஏப். 10

புதுக்குடியிருப்பு உடையார்கட்டு சந்தைப் பகுதியில் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் பற்றுச்சீட்டு இல்லாது விற்பனைக்கு வைக்கப்பட்ட 36 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் றோய்ஸ்ரன் றோய் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சந்திரமோகன், கோகுலன், சுரேசானந்தன் ஆகியோர் அண்மையில் திடீர்ப் பரிசோதனைகளை முன்னெடுத்தனர். இதன்போதே குறித்த குற்றச் செயல் கண்டறியப்பட்டது.

அதனையடுத்து இறைச்சிக்கடை உரிமையாளரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மாட்டிறைச்சி சட்டவிரோதமாக வெட்டப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கைப்பற்றப்பட்ட மாட்டிறைச்சி அழிக்கப்பட்டது. (ச-26)



# தப்பியோடிய டிப்பர் தடம்புரண்டு விபத்து

யாழ்ப்பாணம், ஏப். 10

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் துரத்திச் சென்றபோது வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் வழிமறித்தபோது பொலிஸாரின் உத்தரவை மீறி டிப்பர் வாகனம் பறந்தோடிய நிலையில் பொலிஸாரும் மிக வேகமாகத் துரத்திச் சென்றனர்.

இதன்போது டிப்பர் நல்லூர் பின் வீதியூடாக வீதிவளையில் திரும்ப முற்பட்டவேளை வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீடொன்றின் மதிலை உடைத்து வீதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் டிப்பர் வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-20)


**தேவனுக்கு மகிமை!**

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு (ஆமோஸ் 4/12)

**வருடாந்த கன்வென்ஷனும், சுவிசேஷ ஆராதனையும்**

இடம் : இலங்கை பெந்தெகொஸ்தே சபை சாலை (இளையதம்பி வீதி, அரியாலை)

திகதி : ஏப்ரல் 10 முதல் 13ம் திகதி வரை

நேரம் : தினமும் மாலை 5.30 மணிக்கு

பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம் மற்றும் விடமுடியாத தீய பழக்கத்திலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோசம், பாவமன்னிப்பு தருகிறார்.

**ஏனைய கூட்டங்கள்**

7.00 மு.ப - வேதபாடம்

9.00 மு.ப - ஆராதனை

3.00 பி.ப - காத்திருப்புக் கூட்டம்

**வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்**

**அனுமதி இலவசம்**


# வாழைக்குலைகள் திருட்டு அதிகரிப்பு

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் வாழைக்குலைத் திருட்டுகள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் வாழைத்தோட்டங்களுக்குள் காணப்படும் கதலி, மற்றும் இதரை வாழைக்குலைகளை திருடர்கள் களவாடிச் செல்கின்றனர்.

கடந்தவாரத்தில் மாத்திரம் இந்தப் பகுதியிலுள்ள வாழைத்தோட்டங்களிலிருந்து நூற்றுக் கும் அதிகமாக வாழைக்குலைகள் திருடப்பட்டுள்ளன. இதனால் செய்கையாளர்கள் இரவு நேரங்களில் வாழைத்தோட்டங்களில் காவல்புரிய நேரிடுகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-17)


**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் வடமராட்ச்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 15 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
- ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000.00)
- ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000.00)
- ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000.00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM. பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM. மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M. மாலு சந்தி 1 KM தூரம்
- கரவெட்டி பிரதேசசபை 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம். மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

(CS/2926) J-1

தொடர்பு: 076 860 2770 / 076 987 8617 / 076 935 3971




வலிகாமம் வலய மேசைப்பந்தாட்டப் போட்டியில் மூளாய் சிவப்பிரகாசம் பாடசாலையின் 18வயதுப் பெண்கள் பிரிவு மேசைப்பந்தாட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.